தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 139

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம் :
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு :
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"The Nam Nadu" A Tamil Daily : The Official Organ Of : The D.P.F.

சென்னை : கார்த்திகை 8உ திங்கள் (23—11—53) ★ ★ ★ வெளியூர் : கார்த்திகை 9உ செவ்வாய் (24—11—53)

தூத்துக்குடி சதி வழக்கு: காங்கிரஸ் எம். பி.-யின் எதிர்ப்பு!

நேரில் கலந்து முயற்சிப்பதாக உறுதி

இளையபெருமாள் எம்.பி., ஆதரவு கடிதம்

புதுப்பாளையம் (கடலூர் புதுநகர்), நவ. 21—

அன்புடையீர், வணக்கம்!

தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற, ஆட்சியாளரிடம் கேட்டுக்கொள்ளுமாறு, நியூ டில்லிக்கு, திரு. இளையபெருமாள், எம்.பி., அவர்களுக்கு எழுதிய தபாலுக்கு கீழ்க்கண்டபடி கடிதம் வந்தது: அப்படியே எழுதியுள்ளேன். (அதன் காபி,

From : L. இளையபெருமாள், M.P., 18—11—53
நியூடெல்லி,

"அன்புள்ள தோழருக்கு வணக்கம் பல! நலம்.
உம் லெட்டர் கிடைத்தது. இதற்கு ஆவன செய்ய, தங்களுடன் நேரில் கலந்து பேசிய பின் வழியுடன் செய்வதே சட்டப்படி பயன்தரும் என நம்புகிறேன், மற்றவை பின்.
தங்களன்புள்ள,
L. இளையபெருமாள்"

குறிப்பு : இளையபெருமாள், M.P., காங்கிரஸ் தோழர். தாழ்த்தப்பட்டோர் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்; எங்கள் தொகுதி M.P., என்ற முறையில், கட்சி பேதமின்றி அவருக்கும் வேண்டுகோள் கடிதம் எழுதினேன். அவர் சொந்த இருப்பிடம் முகவரிக்கு அனுப்பியபோது (கடிதம்) அங்கு அவர் இல்லை எனவும், அவருடைய முகவரி குறித்து அனுப்பி அங்கு—டில்லிக்கு கடிதம் எழுதுமாறு "(Manager) மேலாளர், காந்தி ஏழை மாணவர் விடுதி". அவர்களிடமிருந்து பதில் வந்தபின், திரு. இளையபெருமாளுக்கு கடிதம் டில்லிக்கு அனுப்பினேன்.
அன்பன்,
மு. சீனுவாசன்

ஆச்சாரியார் ஆட்சி வெறும் பாசிச ஆட்சியே!

குற்றஞ் சுமத்தாமல் 'லாக்கப்'பில் பூட்டி வைப்பது நியாயமா?

சென்னை, நவ. 23—

21 வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் தோழர் மறைமலை, 18-11-53 அன்று மாலை 4 மணிக்கு போலீசாரால் கைது செய்யப்பட்டு 20—11—53 அன்று காலை 8-30 மணி வரை எவ்வித விசாரணையுமின்றி காவலில் வைக்கப்பட்டு, வீட்டு முகவரி பெற்றோரைப் பற்றிய விபரங்கள் முதலியன மட்டும் பெற்றுக்கொண்டு விடுவிக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் ஏதும் சொல்லப்படவில்லை.

தோழர் மறைமலை 21-வது வட்டத்தின் சிறந்த உழைப்பாளியும், நல்லதொரு பாடகருமாவார். (ந.—நி.)

ஏழுக்கு ஒரு பகுதியினர் இங்கு இழி மக்களாக ஆக்கப்பட்டுள்ளனர்!

இந்து மத ஜாதி ஏற்பாடே இந்த அக்ரமத்திற்கு முழுப்பொறுப்பு

செல்வச் சிறப்பெய்தினும் ஜாதிமுறை ஒழியாத வரை தீண்டாதோருக்கு விமோசனம் இல்லை

தீண்டாமைக்கு வறுமையே காரணம் என்போருக்கு ஜகஜீவன்ராமின் ஆணித்தரமான பதில்

பிகானீர், நவ. 22—

"பழங்குடி மக்கள் அனுபவித்து வரும் இழிவுகள் பலவற்றிற்கு, அவர்கள் ஏழைகளாக, படியாதவர்களாக, பிற்பட்டவர்களாக இருந்துவருகிறார்கள் என்பதல்ல காரணம்; ஆனால் அவர்கள் தீண்டப்படாதவர்களாக உள்ளனர் என்பதினாலேயேயாகும்."

"அவர்களுடைய வறுமை, கல்லாமை, வீழ்ச்சி ஆகியவை, அவர்களுடைய தீண்டாத்தன்மையில் தோன்றிப் பெருகி வருகிறது என்ற அடிப்படை உண்மையை ஒருவரும் மறந்துவிடக்கூடாது. கல்வியும், செல்வமும் அவர்களுடைய பிரச்னைகள் அனைத்தையும் தீர்த்துவிடாது. ஏனென்றால் அந்தத் தொல்லைகள் எல்லாம் இல்லாமையினால் வந்ததல்ல."

"ஒரு தீண்டப்படாதவர் அனுபவித்து வரும் இன்னல்களையும், கொடுமைகளையும், அதே நிலையில் உள்ள ஒரு கல்லாத ஏழை, உயர் ஜாதி இந்து அனுபவிக்க வேண்டிய அவசியமில்லை."

"நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தீண்டப்படாத மக்களின் கேடுகள் பலவற்றைப் போக்கக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது, அவர்களுக்காகத் தரப்பட்டுள்ள நிரந்தரமான தண்டனையிலிருந்து மீட்சி பெற அவர்களுக்கு ஒருக்காலும் உதவி செய்யாது."

"இதற்காக தீவிரமான பரிகாரம் ஒன்றைக் கண்டாக வேண்டும். ஜாதி ஏற்பாட்டையே ஒழித்துக் கட்டுவதுதான் அந்தத் தீவிரமான பரிகாரமாகும்."

—இவ்வாறு, ராஜஸ்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் மாநாட்டைத் திறந்துவைத்த, யூனியன் சர்க்கார் போக்குவரத்து மந்திரி தோழர் ஜகஜீவன்ராம் அவர்கள் ஆற்றிய உரையில் காணக்கிடக்கும் அரிய கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்திற்கு இடிமேல் இடி!

புதுக்கோட்டை மன்னர் கல்லூரி மாணவர்கள் கண்ட முடிவு

பத்தே மாணவர் ஆதரவுபெற்று படுதோல்வியுற்றது

புதுக்கோட்டை, நவ. 23—

"ஆதரிப்பவர் தொகை 10 ஆகவும், எதிர்ப்பவர்களின் எண்ணிக்கை எண்ண முடியாத அளவுக்கு அதிகமாகவும் இருக்கவே, ராஜாஜியின் எதேச்சாதிகார புதுமுறை கல்வித் திட்டம் தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது."

மன்னர் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பில் 19—11—53 மாலை 4-30 மணிக்கு "புதிய கல்வித் திட்டம் அவசியமா?" என்ற தலைப்பில் ஓர் விவாதம் நடைபெற்றது. விவாதத்திற்கு ஆரம்பத்திற்கு மேற்பட்ட மாணவத் தோழர்களும், தோழியரும் வந்திருந்தனர்

கூட்டத்திற்கு ச. சிவாஜி அவர்கள் தலைமை வகித்தார். தலைப்பை ஆதரித்து மாணவத் தோழர்கள் கே.வி சுப்ரமணியம், ஆர். அரங்கசாமி, பி. ஆர். குமாரவேல், டி. எ. பழனியப்பன் முதலியோரும்; தலைப்பை எதிர்த்து மாணவத் தோழர்கள் பி. கருப்பையா, ஆர். வெங்கட்ராமன், பி. அடைக்கலம், பி. தங்கவேல்சாமி முதலியோர் பேசினர்.

நீண்ட நேர விவாதத்திற்குப் பிறகு வாக்குக்கு விட்டதில், ஆதரிப்பவர்தொகை பத்தாகவும், எதிர்ப்பவர்களின் எண்ணிக்கை எண்ண முடியாத அளவுக்கு அதிகமாக இருக்கவே, ஆச்சாரியாரின் எதேச்சாதிகார புதுமுறைக் கல்வித்திட்டம் தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது. (ந. நி.)

அந்தரங்கம்!

"படித்துவிட்டு ரூ. 100 சம்பளத்திற்கு உத்தியோகம் பார்ப்பதைவிட வெற்றிலைப் பாக்கு, பீடி, சிகரெட் கடை வைத்து, இருந்த இடத்திலேயே ரூ. 100 சம்பாதிப்பதுதான் நல்லது என்றும், இதைபொட்டித்தான் புதிய கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டது."

—திருவண்ணாமலையில் ராஜாராம் நாயுடு

குலதர்மக் கல்வி திட்டத்தின் நேரடி பலன்!

மாணவனின் பாதம் இரு பிளவாயிற்று!

காஞ்சிபுரம், நவ. 20—

கோவிந்தவாடி அகரம (காஞ்சிபுரம் தாலுகா) கண்ணப்ப நாயகர் மகன் சுப்ரமணியன் என்ற மாணவனை புதிய கல்வித் திட்டத்தின்படி தந்தை செய்கிற தொழிலை மகன் செய்யும்படி ஆசிரியர் உத்தரவிட்டார். தந்தை உழவுத் தொழில் செய்பவர். மகன் 19—11—53ல், கடப்பாரை எடுத்து தோட்டத்தை கொத்தும்போது பாதத்தில் பட்டு பாதம் இரண்டாக பிளந்துபோய் விட்டது.

அவ்வூர் மக்கள் உபாத்தியாயரை ஏசுகின்றனர். பாவம் ஆசிரியர் என்ன செய்வார்! குலதர்மக் கல்வித் திட்டம் போதிக்க மேலிடத்திலிருந்து உத்தரவு? அவ்வூர் மக்கள் கனம் ஆச்சாரியார் வருகையை எதிர்பார்த்து இருக்கின்றனர்! (ந. நி.)

மேலும் அவர் பேசுகையில், தீண்டாமை ஒழிப்பு வெற்றிபெற வேண்டுமானால், இந்து மதத்தில் உள்ள ஜாதி ஏற்பாடுகளை அடியோடு தொலைந்தாக வேண்டும் என்று கூறியுள்ளார். இந்தியத் துணைக்கண்டத்து மக்களின் ஏழில் ஒருபகுதியினரை, இந்த ஜாதிமுறை இழிவில் நிலையாகத் தள்ளி வைத்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

"இந்து சமூகத்தைச் சேர்ந்த தீண்டப்படாதவர்கள் என்பது மட்டுமல்லாமல் பிற்பட்ட மக்களையும் சேர்த்து லட்சோபலட்சம் மக்கள் மீது, தலைமுறை தலைமுறையாக—ஏன் — உலகம் தோன்றிய நாள் முதல், அவமானத்தை

(3-ம் பக்கம் பார்க்க)

ஐவர் சிறையில்!

இன்று

84-வது நாள்

நம் நாடு

திரு. கருத்தின இதழ் — ஆசிரியர் அண்ணாதுரை

சென்னை 23—11—1953 திங்கள்

ஒரு வாரத்தில்!

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை துணைச் செயலாளர்கள் இரா நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், செயற்குழு உறுப்பினர்கள் ஈ. வெ. கி. சம்பத் என். வி. நடராசன் ஆகிய ஐம்பெரும் தலைவர்களும், அமைச்சர் ஆச்சாரியார் சர்க்காரின் கொடிய அடக்குமுறை பிடியிலிருந்து விடுபடுவதற்கு இன்னும் ஒரு கிழமைதான் இருக்கிறது. திராவிட நாடு இலட்சிய வெற்றிக்கு, உரிமையோடு, சிறந்த முறையில், அமைதியாக மீண்டும் பணிபுரியும் நாளை, லட்சக்கணக்கான திராவிட இன மக்கள், இதயத் துடிப்புடன், கண் உறக்கமின்றி, எதிர்நோக்கிக்கிடக்கிறார்கள் என்பது மிகைபடக் கூறியதாகாது.

அவர் திராவிடத்தின் உள் ஒளி என்பது மாற்றாரும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை. அவர்களுடைய வரவை, திராவிடம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தருவாயில், அரசியல் சூழ்நிலை கோணாமல் கோலோச்சும் வாய்ப்பினைப் பெற்றுள்ள அமைச்சர் ஆச்சாரியார், அந்தத் திராவிடச் செம்மல்களுக்கும், திராவிட மக்களுக்கும், உள்ள நெஞ்சத் தொடர்பு, மேலும் அறுந்திருக்கப் பார்த்துக் கொள்வதிலேயே நாட்டமுடையவராக இருக்கிறார் என்பதை, அவருடைய நடவடிக்கை விளக்கிக் காட்டுகிறது.

குருதியோடும் தசையோடும் திராவிட மக்களிடை ஒட்டிக் கிடந்த அம் மகோன்னதத் தொடர்பை, தன் தற்கால மனச் சாந்திக்காக, சட்டங்கொண்டு துண்டித்து மகிழ்ந்த அமைச்சர் ஆச்சாரியார், அந்தப் பிரிவினையை மேலும் சில காலத்திற்கு நடைமுறையில் காண விரும்புவது அரசியல் விவேகமும் ஆகாது, நாகரிகமும் அல்ல என்பதை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உண்மையான சேவையுள்ள இயல்பினர் உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

இவர்கள் அமைச்சர் ஆச்சாரியாரின் குணக்கேட்டை, கெடுமதியை, அடக்குமுறை வெறியை, வெளிப்படையாக இல்லையானாலும், உள்ளுக்குள்ளாக, இதய பூர்வமாகக் கண்டித்துத்தான் வருகிறார்கள். அதிகாரப் பேயின் பிடியில் சிக்கி செயலாற்றித் திரிபவருக்கு, அவர்கள் கூறும் அறிவுரை செவி புகத் தவறிவிட்டதில் ஆச்சரியம் இல்லை.

இந்தத் திராவிட மணிகளை, இருட்டறையிலேயே இன்னும் கொஞ்ச காலத்துக்குத் தள்ளிப் பூட்டி வைத்து விட்டால், தன்னுடைய அமைச்சர் பதவிக்கு ஆட்டங் கொடுத்திருப்பதை மேலும் கொஞ்ச நாளைக்குத் தள்ளிப் போடலாம் என்று அமைச்சர் ஆச்சாரியார் நினைப்பதாகத் தெரிகிறது. சொந்த வீட்டினரே, குடும்பத் தலைவர் என்று போலியாக நடித்து வந்தவரை, வெளி வாயிலில் கொண்டு வந்து நிறுத்தி, உள்ளே நுழைய விடாமல் பலங்கொண்ட மட்டும் கெட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதால், தனக்கு ஏற்பட்டுள்ள கடுமையான எரிச்சலுக்குப், போக்கிடமாக நமது அரும்பெரும் தலைவர்கள் மீது, அமைச்சர் ஆச்சாரியார் பாய்வதாக இருந்தாலும் இருக்கலாம்.

ஐவர்களை வெஞ்சிறையிலேயே சில காலம் முடக்கி வைத்துவிட்டால், திராவிடம், அவர்களை மறந்துவிடும் என்று அமைச்சர் ஆச்சாரியார் அற்பமாக நினைப்பதாக இருந்தாலும் இருக்கலாம். இதில் உண்மை எதுவாக இருந்தாலும், அமைச்சர் ஆச்சாரியார் போடும் கணக்கு தப்புக்கணக்கு என்பதில் மட்டும் எள்ளளவேனும் ஐயம் கிடையாது.

இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும், நமது தலைவர்களைக் காவலிலேயே ஆச்சாரியார் சர்க்கார் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணுவதற்கு மிக முக்கியமாகப் பொருந்தும் காரணம் ஒன்று இருக்கிறது. அதாவது, அண்ணாதுரை உள்ளிட்டு ஐவரும் வெளியே வந்தால், தூத்துக்குடி சதி வழக்கைத் திறம்பட நடத்தி, முழு வெற்றி காண்பதில் பலமான முயற்சியில் ஈடுபடுவார்கள்; எனவே, அவர்களை வெளியே விடாமல் சில காலம் பார்த்துக் கொண்டால், தூத்துக்குடி வழக்கில் தன்னுடைய ஆசை இடைஞ்சலின்றி நிறைவேறும் என்று அமைச்சர் ஆச்சாரியார் எண்ணிக் கொண்டிருக்கிறார் என்பதை, அவர் நடைமுறை மெய்ப்பிக்கிறது.

தூத்துக்குடி வழக்கு முடியும்வரை ஐவரையும் சிறையிலேயே வைத்திருந்தால், எதிர்வழக்காடத் தேவைப்படும் குறைந்த அளவு 20 000 ரூபாயை விரைவிலே பெற தி. மு கழகத்தால் முடியப்போவதில்லை. ஆதலால் எதிர்வழக்காடு வதும மந்தமாகும். இப்படி ஆச்சாரியார் முடிவு கட்டி விட்டதால்தான், ஐவரை மேலும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றத்துக்கு வழக்குரைக்க அவர் ஓடி இருக்கிறார். இல்லையானால், அபராதத் தொகை 500 ரூபாயை வசூல செய்துவிட வாரண்டு வாங்குவதின் மூலம் வழக்கை முடிவு கட்டிவிட்ட ஆச்சாரியார் சர்க்கார் மறுபடியும் தண்டனையைக் கூடுதலாக்க 'அப்பீல்' செய்திருக்கிறது என்றால், இந்த மறுயோசனைக்கு தூத்துக்குடி சதிவழக்கைத் தவிர வேறு எதைக் காரணமாக காட்டமுடியும்? நிற்க,

தூத்துக்குடி சதி வழக்கில், எதிர்வழக்காட நமக்குள்ள சக்தியை பலவீனப்படுத்தி, எதிர்வழக்காடுவதில் நாம் சலிப்படையச் செய்யவேண்டும் என்ற சதியாலோசனையின் விளைவுதான், ஐவர்களை மேலும் சிறையில் வைத்திருக்கவேண்டும் என்ற ஆச்சாரியார் சர்க்காரின் நினைப்பு. இந்தச் சதியை நாம் சுக்குநூறாக உடைத்தெறிய வேண்டும்.

அதற்காக, ஐவரும் வெளிவரும் அந்த நாளில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம், 'தூத்துக்குடி சதி வழக்கு நிதி, இதோ!' என்று, நாம் கர்வமாக மார் தட்டி, தோள் உயர்த்தி, தலை நிமிர்ந்து கூற வேண்டும். இப்போது சேர்ந்துள்ள தொகை அதற்குப் போதியதாகாது என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை.

'சபாஷ்! தம்பிகளா!' என்று அவர் கூறவேண்டுமானால், மேலும் சில ஆயிரம் ரூபாய்கள் தேவை. உடனடியாக ஆவன செய்யுங்கள், ஆச்சாரியார் சர்க்காரின் அற்ப சந்தோஷத்தைப் பொய்யாக்க! நமது பலத்தை மெய்யாக்க! இன்னும் ஒரே வாரம்! முடித்தாக வேண்டும் நமது கடமையை!

கருணாநிதிக்கு வரவேற்பும் பாராட்டும்

★

திருச்சி, நவ. 21—

இன்று காலை விடுதலைபெற்ற தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு, ஓர் பாராட்டுக் கூட்டம் கல்லக்குடி அறப்போராட்ட குழுவின் சார்பில்—திருச்சி புத்தூர் சின்ன மைதானத்தில் நடைபெற்றது. தோழர் எம். எஸ் மணி முன்மொழிய, தோழர் அழகமுத்து வழிமொழிய தோழர் அன்பில் தர்மலிங்கம் தலைமை வகித்தார்.

தோழர்கள் மதுரை [illegible], அரங்கண்ணல், ஏ. [illegible] ந்தசாமி, என் எஸ். இ [illegible] கர, கே. எம். கண்ணபிரான், [illegible] பாவு எம் ஜி ராமச்சந்திரன் ஆர் பாலகுருசாமி, வழக்க [illegible] ஞர் பெருமாள், [illegible], அ குருசாமி ஆகியோர் [illegible] டேசினர். தோழர் [illegible] நிதி நன்றி தெரிவிக்க, கூட்டம் இனிது முடிவுற்றது.

[முழு விவரம், பேச்சுக்களும் தொடர்ந்து வெளிவரும்]

சீக்கியர்களின் போர்க்கோலம்!

கட்ஜூ வீட்டுமுன் உரிமை முழக்கம்

பாடியாலா, நவ. 22—

மத்திய சர்க்கார் உள்நாட்டு இலாகா மந்திரி கட்ஜூ வீட்டு முன்; சீக்கிய மாகாணம் கோரும், அகாலி தளக்கட்சியினரால் சேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கூட்டத்தினரைப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். இதன் காரணமாக அக்கட்சியினரில் எழுவருக்கு காயமேற்பட்டுள்ளது. பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். "பாடியாலா சமஸ்தானத்தை பஞ்சாபுடன் இணை," "சீக்கிய தனி மாகாணம் தேவை!" "உண்ணாவிரதமிருக்கும் பூரண்சிங்கை உடன் விடுதலை செய்" என்று அகாலிதளக் கட்சியினர் பெரும் கோஷம் கிளப்பினர்.

திருமணத்திற்கு முன் வைத்தியப் பரிசோதனை

புது மசோதா வருகிறது

லண்டன், நவ. 21—

திருமணம் செய்துகொள்ள நிச்சயித்துள்ள தம்பதிகள் திருமணமாகுமுன் வைத்தியப் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்கிற மசோதா ஒன்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கொண்டுவரப்பட விருக்கிறது. எல்லா கட்சியினரும் இதை ஏகமனதாக ஆதரிக்கின்றனர்.

ஆந்திராவில் ரயில் நிறுத்தம்

— (:) —

1000 நெசவாளர்களின் அறப்போர் வெற்றி!

விஜயவாடா, நவ 22—

சிராளா ரயில்வே ஸ்டேஷன் அருகே, சென்னை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலை, சுமார் ஆயிரம் நெசவாளர்கள், இன்று, தடுத்து நிறுத்தினர். "பிரகத கோட்டையாவை உடனே விடுதலை செய்," என அவர்கள் ஒலித்தனர். இதன் காரணமாக ரயில் அரைமணி நேரம் தாமதப்பட்டது என்று தெரிய வருகிறது.

தோழர் பிரகத கோட்டையா, நேபள்ளி என்னுமிடத்தில், தடை யுத்தரவை மீறி; சத்தியாக்கிரகம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டார்.

விஜயவாடா நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு கூட்ஸ் வண்டியையும், ஒரு மணி நேரத்திற்கு மேல் நிறுத்தி, நெசவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன் காரணமாக, தோழர் கோட்டையாவுக்கு விடுதலை வழங்கி, அவருக்கு கொடுத்திருந்த 4 மாத தண்டனையையும் ஆந்திர சர்க்கார் தள்ளுபடி செய்துவிட்டது.

விராலிமலை தி. மு. கழகம்

6—11—53-ல், தோழர் ச. மருதமுத்து தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், தோழர் ச. சி. சுப்ரமண்ய பிள்ளை அவர்கள் பெயரை மாற்றி, எஸ் எஸ். வீரமணி என்று பெயரிடப்பட்டு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பின்னர் தோழர்கள் எஸ் எஸ். வீரமணி செயலாளராகவும், சி. சுப்பையா துணைச் செயலாளராகவும், எஸ். மருதமுத்து மாவட்டப் பிரதிநிதியாகவும், எம். சுப்பையா பொருளாளராகவும், நிர்வாக அங்கத்தினர்களாகத் தோழர்கள் எஸ். முத்துசாமி, சி. ஏழுமலை, பி. சோமசுந்தரம், எ. பொன்னையா, நடராசன், கே. கல்லையா, கே. நடராசன், வீராசாமி, பி. கருப்பையா, எம் கல்லு ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

45 மணி நேர சைகிள் சவாரி

சென்னை, நவ. 23—

தி. மு. கழகத் தோழர் கே. செயராம், நம்மாள்வார் பேட்டையில், கார்ப்பரேஷன் பள்ளி மைதானத்தில், 22—11—53 அன்று மாலை 6-30 மணிக்கு தனது 48 மணி நேர இடைவிடாத சைகிள் சவாரியைத் தொடங்கியுள்ளார். 24 11-53 மாலை 6½ மணிக்கு சைக்கிளை விட்டு இறங்குவார். அவருக்கு தோழர் காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில் பாராட்டு அளிக்கப்படும். தோழர் முகவை ஆர். எஸ் பாண்டியன் பேசுவார்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 4212-1-11

வழக்கு ஒரு......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யும், இழிவையும் வலுக்கட்டாயமாகச் சுமத்தி வைத்திருப்பதோடு, இந்திய மக்கள் பல்லோரின் படைப்பு ஆற்றலையும் அழித்துவிட்டிருப்பதற்கு ஒரே ஒரு தனிக் காரணமாக இருப்பது ஜாதிப் பாகுபாடேயாகும், வெளிப்படையாகத் தெரிந்த உண்மையையே நான் திரும்பவும் கூறுகிறேன்."

இந்திய அரசியல் சட்டம் தீண்டாமைக்கு முற்றுப் புள்ளி வைத்திருந்தபோதிலும், கிராமப்புறங்களில் மட்டுமல்லாமல், பெரும் நகரங்களிலும் சிற்றூர்களிலும் கூட, அதன் கோர சொரூபத்தை இன்னும் நாம் காண்கிறோம். பல மாநில சர்க்கார்களில் தீண்டப்படாதோரின் குறைபாடுகள் சட்டப்படி களையப் பட்டிருக்கின்றன; ஆனால், அவ்வளவும் ஏட்டளவில்தான் காணக்கிடக்கின்றன,

சமுதாய சீர்திருத்தங்களுக்கு, தேடப்படும் சட்டப் பரிகாரங்கள் பொதுஜன ஆதரவுடன் கூடியதாக இருக்கவேண்டும். அந்தப் பொதுஜன ஆதரவை காந்தியார் திரட்டிக் கொண்டிருந்தார். அவருக்குப் பிறகு பெருல்பாலானத் தலைவர்களிடம், சங்கங்களையும் இத்துறையில் சலிப்பு கவ்விக்கொண்டது. அவர்களுடைய பாராமுகத்திற்கு, சட்ட பூர்வமாக இந்திய அரசியல் சட்டத்தில் தீண்டாமை அகற்றப்பட்டு விட்டிருப்பது காரணமாக இருக்கக் கூடும் என்று ஒப்புவோம்.

"தீண்டப்படாதவர்களின் பிரச்சினைகள் எல்லாம் பொருளாதாரத்தைப் பொறுத்துள்ள ஒன்று என்றும், எனவே அவர்களுடைய தலையெழுத்து மற்ற ஏழை மக்களுடன் பின்னிக் கிடப்பதென்றும், பொதுவாக நாட்டின் செல்வ நிலை சீர் பெற்றால், அவர்களுடைய கஷ்டங்கள் அனைத்தும் அறவே நீங்கிவிடும் என்றும் தலைவர்களில் ஒரு சாரார் கூறுகின்றனர்."

பொருளாதாரத் துறையில் தீண்டப்படாதவர்கள் மிகமிகப் பின்னணிக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கிறார்கள் என்பதும், அதனால் ஜாதி ஏற்பாட்டின் விளைவாக அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடும், வரம்பும் இன்றும் இருந்து வருகிறதென்பதும் உண்மைதான்."

"ஆனால், தீண்டப்படாதவர்களின் பிரச்னை பொருளாதாரத்தை மட்டுமே பொறுத்திருக்கிறது என்று கூறுவது, தீண்டப்படாத மக்களை இழிவிலேயே அழுத்தி வைப்பதற்கான காரணத்தை நன்கு ஆராய்ந்து பார்க்காது முடிவு கூறும் பெருந் தவறேயாகும்."

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன் தொடர்ச்சி ரு	3436—2—2
மதுரை தியாகராயர் கல்லூரி மாணவர்கள் சார்பாக	30—0—0
மேலூர் தி. மு. கழக மாணவத் தோழர்களால்	2—0—0
கோயமுத்தூர் வெங்கடாசலம்	5—0—0
எஸ். டி. பட்டாபி	5—0—0
சண்முகம்	3—0—0
அன்பரசன்	2—0—0
ஜோ. கு. சுப்ரமணியன்	2—0—0
எஸ் பி கோவிந்தசாமி	2—0—0
அ. வரதராசன்	2—0—0
பழனிசாமி	1—0—0
தி. சு முனுசாமி	1—0—0
ரங்கநாதன்	1—0—0
தி தி ராயன்	1—0—0
சென்னை வெள்பாரியும், அவரது நண்பர்களும்	10—0—0
ஒண்டிபுதூர் தி. மு கழகம்	10—0—0
கிரப்பாளையம் தி. மு. கழகம்	10—0—0
வேலூர் க. கா. தாண்டவன்	1—0—0
,, கா. கா. தம்பித்துரை	1—0—0
,, க. க. முனுசாமி	1—0—0
,, தி. தேவராசன்	1—0—0
அண்ணாமலை நகர் கே. கே. சாமி	1—0—0
சுப்ரமணியபுரம் நடராசன்	1—0—0
திருநெல்வேலி பால் அருணாசலம்	1—0—0
லூள்ளம்பட்டி கே. பி ரங்கசாமி	2—0—0
கிழையூர் எஸ். சோமசுந்தரம்	1—0—0
மேலூர் பி தங்கவேலு	1—0—0
வளையபட்டி அ. கிருஷ்ணமூர்த்தி	2—0—0
தேனி வேலப்பா	1—0—0
அண்ணாமலை நகர் தி. மா. மு கழகம் அனுப்பியது	50—0—0
சென்னை மீர்சாயிப்பேட்டை ஜி. சம்பத்	2—0—0
தென்பகுதி ரயில்வே பொரம்பூர் கேரியேஜ் தொழிற்சாலை தோழர்கள்	19-14—0
மேட்டூர் அணை ஆர். எஸ். தி. மு. கழகம் மூலம் :—	
ஐ. கே முத்துசாமி	2—0—0
ராஜி	2—0—0
எஸ் வி. அர்த்தனாரி	1—0—0
ஏ. பழனிசாமி	1—0—0
பெருமாள்	1—0—0
பெ. ராசமாணிக்கம்	1—0—0
டி. ராமகிருஷ்ணன்	2—0—0
குள்ளுசாமி	1—0—0
அழகிரிசாமி	1—0—0
முனுசாமி	1—0—0
மு தயாளதாஸ்	1—0—0
எஸ் பி. குருநாதன்	1—0—0
க. கு. சின்னசாமி	1—0—0
பெத்தி	1—0—0
ஆ. பாலு	1—0—0
சி. க. சு. மணி	1—0—0
கே. எஸ். சின்னப்பன்	1—0—0
ந. சுபான்	1—0—0
செங்கோடன்	1—0—0
சிரங்கன்	1—0—0
த. சின்னான்	1—0—0
ரா. இதயன்	1—0—0
நைனான்	1—0—0
ள. சி. அர்த்தனாரி	1—0—0
எஸ். என் ஆறுமுகம்	1—0—0
மேட்டூர் அணை (அக்கரை) பொதுமக்களிடத்தும் கழகத் தோழர்களிடத்தும் வசூலித்தது.	30—0—0
மேட்டூர் தி. மு. கழகப் பொது நிதியிலிருந்தும், 'தூத்துக்குடி வாரம்' கார்டு அச்சடித்து விற்றதிலிருந்தும்	17—4—0
மேட்டூர் அணை, கந்தசாமி, பங்காரசு, முத்துராசு, வெங்கடாசலம், ராமசாமி, சாமிநாதன், சாமிகண்ணு, நல்லதம்பி, நடராசன், சின்னப்பன, வீரன், திருவேங்கடம், பாலகிருஷ்ணன், ராமசாமி, சாமியப்பன், பழனியப்பன், பழனிசாமி, செல்லமுத்து, நடராசன், சுந்தரமூர்த்தி, சிரங்கன், கைலாசம், பெரியசாமி, சாமிவேல், அர்த்தனாரி, பாலு நாயுடு, நாச்சிமுத்து, தங்கவேலு, கந்தசாமி, கோவிந்தன், மாரியப்பன், லட்சுமணன், ஜான், ராசு, கோபாலகிருஷ்ணன், பழனியப்பன், சுப்ரமணியம், பரமசிவம், சின்னதம்பி, அர்த்தனாரி, ஐயண்ணன், முருகன, முத்துசாமி, கணபதி, ஒரு அனுதாபி, வீரப்பன், செல்லப்பன், சாமி, வெங்கடாசலம், ஸ்டான்லி, சோட்டபாய், பழனியப்பன், மாரப்பன், சின்னசாமி, முத்துசாமி, வீரப்பன், அப்துல் ஜலீல், சாமுவேல், ஜெகநாதன், நஞ்சப்பன், ஜெபமாலை, பொன்னுசாமி, கஞ்சி ரெட்டி, திருவேங்கடம், ஒரு அனுதாபி ஆகியோர்	25-12—0
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்கள் சம்பளத்தில் வசூலானது	
வால்பாறை சென்னை மாகாணத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தோழர் ஜெயக்கனி அவர்களால்	100—0—0
பொள்ளாச்சி துயமணி	2—0—0
சென்னை 24. 28-வட்ட தி. மு கழகச் சார்பில், 15—11—53-ந் தேதி நடந்த ஹால் கூட்ட வசூலில் அளித்தது	100—8—0
சென்னை ருயப்பேட்டை பி அண்டு சி. மில் தொழிலாளி எஸ் ஜோசப்	5—0—0
சென்னை எம் மார்த்தி	5—0—0
சென்னை 14. 24 ஆகிய வட்ட தி மு. கழகங்கள் 8-ந் தேதி நடத்திய கூட்டத்தில உண்டி வசூல்	44—3—9
சென்னை அயன்புரம் மு. காசி	2—0—0
,, வ. ந. சாமி	2—0—0
,, சி. த. சா	2—0—0
,, பெ. தங்க	2—0—0
,, பாண்டியன்	1—0—0
,, வ. ப ராமசாமி	1—0—0
,, செல்வராசன் அண்டு கோ.	2—0—0
,, த. சக்கரை நாடார்	2—0—0
,, ரா. வேலாயுத	1—0—0
கணியூர் தி. மு. கழக பொதுக்கூட்ட உண்டி வசூல்	23—5—0
,, இளைஞர் அறிவகம்	10—0—0
,, அழகிரி மன்றம்	10—0—0
கள்ளிவலசு பகுத்தறிவுப் படிப்பகம்	1—0—0
,, ஆறுமுகம்	1—0—0
பெரியகுளம் வி குறள்தாசன்	1—0—0
செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) தி. மு. கழகம்	25—0—0
சென்னை 40-வது வட்ட தி மு கழகம்	16—0—0
மாங்காடு தி மு கழகம்	10—0—0
மன்னார்குடி கே. பாலகிருஷ்ணன்	2—0—0
,, ர கணேசன்	1—0—0
,, மதிவாணன்	1—0—0
,, ப. சிவராஜ்	1—0—0
,, க. சரோஜா	1—0—0
,, ர. சந்திரன்	1—0—0
குருசாமி, தட்சணாமூர்த்தி, முனுசாமி, விஸ்வநாதன், சம்பந்தம், சோமு, சிவஞானம், ராசகோபால், இன்பநாதன், கிருஷ்ணன் முதலியோர்	3-10—0
அயன்சரிசல் குளம், எஸ். வாழவந்த நாடார்	10—0—0
வீசலூர் ரங்கநாதன்	5—0—0
ஈரோடு ஆதி சு. கருப்பையா மூலம்	5—0—0
கோயமுத்தூர் க. வெங்கடாசலம்	5—0—0
பொன்மலை ந. அரைராசன்	2—0—0
மதுரை கே. எஸ். மணி, இ. இசைப்பித்தன்	1—8—0
பண்ருட்டி ஜே. தர்மராஞ்சலு	3—0—0
,, ப. க. கங்காதரன்	1—0—0
,, வி. சி. வெள்ளையசாமி, அரிகிருஷ்ணன்	1—8—0
லால்குடி லா. அ. ராமசாமி	1—0—0
,, எஸ். ரத்தினசபாபதி	1—0—0
,, ரா. சேதுரத்தினம், கோபால்	1—3—0
,, ஜே. கனகராசன்	1—0—0
லால்குடி ரா. காளியப்ப நாடார்	1—8—0
,, ப. சிவப்பிரகாசம்	1—0—0
,, எஸ். டி. கந்தசாமி	1—0—0
,, எஸ். பி. ஆறுமுகம்	1—0—0
,, இஸ்மாயில்	1—0—0
,, எஸ். முத்து	1—0—0
,, எல். எம். தங்கராசன்	1—0—0
,, எல். என். நீலமேகம், எல். ஆர். நாராயணன்	1—0—0
சென்னை கா. திருவேங்கடம்	2—0—0
புழல் தி. மு. கழகம்	20—0—0
சென்னை அனுதாபி ஒருவர்	1—0—0
வேலூர் ஏ. எஸ் குப்பண்ணு	2—8—0
சேமனூர் கை. கா. இளமதி	2—0—0
கொல்லைக்கோம்பை தி. மு. கழகம்	2—0—0
பெங்களூர் கோவிந்தராசன்	1—0—0
,, ஜானகிராமன்	1—0—0
,, சுப்ரமணியன்	1—0—0
திட்டை பி. குஞ்சிதபாதம் மூலம் வசூல்	3—8—0
நாகலாபுரம் தி. மு. கழகம்	5—0—0
இலுப்பரெட்டியபட்டி, ஆறுமுகசாமி, மோசஸ், தேவசகாயம், செல்வநாயகம், பாம்புலையா, சுந்தரம், பீட்டர், மரகதஒளிவு, ரத்தினம், சங்கலையா, சின்னசாமி ஆகியோர்	5—0—0
குமாரசாமிபட்டி சி. ரத்தினசாமி,	2—0—0
,, எல். செல்லமுத்து	2—4—0
,, குமாரவேல், சம்பத்குமார், தங்கவேல், வெங்கடராமன், சமுவமலை, ரங்கன், நடராசன், குமரேசன், ராமன் ஆகியோர்	3-12—0
சேத்தூர் ஆ. மு. ரா. கணபதியப்பன்	2—0—0
,, மீ. பரமகுரு	1—0—0
,, ஏ. எஸ். ஏ. சாமி, வெள்ளைச்சாமி, கோவிந்தன், மாடசாமி, நடராசன், சஞ்சீவி, கரிசலிங்கம், மாரியப்பன், அ மாரியப்	

(தொடர்ச்சி அடுத்த பத்தி பார்க்கவும்)

தி. மு. கழகங்கள் துவக்கம்

இராசிபுரம்

7—11—53ல், தோழர் ஆர். சி கண்ணன் தலைமையில் இராசிபுரம் நகர 2-வது வார்டு தி. மு கிளைக் கழக திறப்பு விழா நடைபெற்றது. தோழர் எ. கோவிந்தசாமி, எம் எல் ஏ, திறப்பு விழா வாற்றினார். தோழர் சிற்றனி சப்ரமணயம் கொடியேற்று விழா வாற்றினார். தோழர் இ. ஆர். கிருஷ்ணன் அண்ணாதுரை படத் திறப்பு விழா வாற்றினார்.

* * *

5—11—53ல், தோழர் டி. பத்மனாபன் தலைமையில் இராசிபுரம் 11-வது வார்டு தி. மு கழகக் கிளை அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம், தோழர்கள் எ. கோவிந்தசாமி செயலாளராகவும், ஆர். சி கண்ணன் துணைச் செயலாளராகவும், டி. ராஜு பொருளாளராகவும், நிர்வாக உறுப்பினர்களாகத் தோழர்கள் டி. கந்தசாமி, பு வேணுகோபால், மு. சங்கரநாராயணன், அ. முத்தேல்சாமி, டி. எஸ். மணி, எம். வெங்கடேசன், ஆர். கந்தசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் ஆர். சி. கண்ணன் நகர கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

7—11—53ல், 11-வது வார்டு தி மு கிளைக் கழகம் தோழர் சிற்றனி எ சுப்பிரமணியம் அவர்களால் திறக்கப்பட்டது. தோழர் கே. வி. கே ராமசாமி கொடி ஏற்றிவைத்தார். தோழர் வி. சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் கோ. இறைமணி பேசியபின் செயலாளர் எ. கோவிந்தசாமி நன்றிகூற கூட்டம் முடிவுற்றது

உடுமலைப்பேட்டை

5—11—53ல், ஒருக்கல்லூர் கிராமத்தில் தி. மு கழக அமைப்புக் கூட்டமும், துவக்க விழாவும் நடைபெற்றது. அது போது, கீழ்க்கண்ட செயற் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தோழர்கள் கு சின்னசாமி செயலாளராகவும், தி கோவிந்தராசன் துணைச் செயலாளராகவும், க. பழனியப்பன் பொருளாளராகவும், மாணிக்கம் மாவட்ட பிரதிநிதியாகவும், மேலும் 11 பேர் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கமுதி

8—11—53ல், இவ்வூர் தி. மு. கழகக் காரியாலயத்தை, அபிராம தோழர் இ. ல. மு. சாமி திறந்து வைத்து, கொடியேற்றி வைத்தார்.

மாலை தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் குழுவில், செயலாளராக ச. வ குருசாமியும், துணைச் செயலாளராக தம்பித்துரையும், பொருளாளராக க. முத்துரத்தினமும், மாவட்டப் பிரதிநிதியாக இ ல. ம. சௌந்திரபாண்டியனும், மற்றும் 7 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், "தூத்துக்குடி நாள்" கொண்டாடப்பட்டது.

கரூர்

15—11—53-ல், நாகம்மையார் திடலில், 19-வது வார்டு தி மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் முத்து தலைமையில் நடைபெற்றது. தோழியர் பூங்கோதை, தோழர்கள் வி சிவப்பிரகாசம், கரிகாலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக உண்டியல் மூலம் ரூ 10 வசூலாயிற்று.

கரூர் தி. மு கழகத் தோழர் முத்து அவர்களின் துணைவியார் இயற்கை எய்தியமை குறித்தும், ஸ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்களின் துணைவியார் இயற்கை எய்தியமை குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன், தூத்துக்குடி தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மு. களத்தூர்

1—11—53-ல், இவ்வூரில் தி. மு. கழகம் நிறுவப்பட்டது. தோழர் ஆர். அருணாசலம் அவர்கள் தலைமையில், தோழர்கள்: கே. வி. எம். ரங்கசாமி செயலாளராகவும், பி. ரத்தினம் துணைச் செயலாளராகவும், எ. பி. மதுரைவீரன் பொருள் காப்பாளராகவும், கே. ஒ மயில்வாகனம் மாவட்ட உறுப்பினராகவும் வி. கே. மதுரைவீரன், வி கே. சன்னாசி, எம். பெரியசாமி, இரா. பெருமாள், கே வீரமலை, எம். ரங்கசாமி, வி. புக்குண்டி, கே. பி. மதிவாணன், கே. எம். பெரியசாமி, கே. பி. சங்கப் பிள்ளை, ஆர். காத்தமுத்து செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

10—11—53-ல், தோழர்கள்: கே. பி. பூவலிங்கம் தலைமையில் இரண்டாவது கமிட்டி கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: ஆர். அருணாசலம், கே. பி நடராசன், ஆர். பெருமாள் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேறின.

சயன் பம்பாய்

9-11-53ல், இராமர் கோவில் சமவெளியில் தோழர் என். இராசன் தலைமையில், சயன் தி. மு. கழகத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் உ. அ. செல்லையா, கருணாசங்கரன், தா. மு. பொற்கோ, வள்ளிநாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கொடியேற்றிவைத்து சொற்பொழிவாற்றினர்.

மோவூர்

சிதம்பரம் வட்டம், காட்டுமன்னார்குடி பிர்காவிலுள்ள மோவூர் கிராமத்தில், 9-11-53-ந் தேதி தி மு. கழகம் துவக்கப்பட்டது.

தோழர்கள் எம். ஜி. இராமானுஜம் செயலாளராகவும், என். குமாரசாமி துணைச் செயலாளராகவும், எம். பி. இராமசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(முன் பத்தியின் தொடர்ச்சி)

பன், குருவானந்தம், சங்கரபாண்டியன், மாரிமுத்து, விருபாகமூர்த்தி, ஏருவன், கப்புவம், அம்மமுத்து, கணபதி, ரணபத்தி ஆகியோர்	7—0—0
புதுச்சேரி ரகமதுல்லா	1—0—0
சங்காபுரம் தி மு. கழகத் தோழர்கள்	8—0—0
தொட்டியக்கோட்டாம்பட்டி தி. மு. கழகப் பொதுக் கூட்ட உண்டி வசூல்	4-12—0
	4214—1-11
நவ. 19-ந் தேதி இதழில் வெளியிடப்பட்ட கணக்கில் சென்னை தியாகராயர் கல்லூரி மாணவர்கள் 14 பேர்களால் அளிக்கப்பட்ட தொகை 4—4—0 என்பதற்குப் பதிலாக, 6—4—0 என்று தவறுதலாக வெளியிடப்பட்ட கழிவு	2—0—0
ஆக மொத்தம் ரூ.	4,212—1—11

குற்றம் குற்றமே!

மறைப்பதால் பயனில்லை

சென்னை, நவ. 21—

"சென்னை சட்ட சபை காங்கிரஸ் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ஆச்சாரியாரை எதிர்க்கிறார்கள்; ஆகவே, ஆச்சாரியார் பதவியிலிருக்கலாமா என்பதே கேள்வி"

—இவ்வாறு டாக்டர் வரதராஜுலு நாயுடு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவர், மேலும் அவ்வறிக்கையில் கூறியுள்ளதாவது:—

"சென்னை சட்ட சபை காங்கிரஸ் காரர்களுக்கும், மந்திரி சபைக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறு பற்றி பத்திரிகைகளில் வரும் விவாதத்தில் நான் கலந்து கொள்ளாதிருந்தேன்; ஆனால், ஒரு சில பத்திரிகைகள் செய்திகளை திரித்துக் கூறுவது வருந்தத்தக்கதாக இருக்கிறது. பத்திரிகைகளுடன் சில காங்கிரஸ் பிரமுகர்களும் இதே போன்ற பிரசாரம் செய்கிறார்கள்."

"ஆச்சாரியார் மந்திரி சபை மீது குற்றம்சாட்டி, கையொப்பம் பெற்று, நேருவுக்கு அனுப்பப்பட்ட மகஜரும், அதில் கையொப்பமிட்டவர்களின் பெயர்களும் வெளியானதும், காங்கிரஸ் பத்திரிகைகளும், ஆச்சாரியார் பக்தர்களும் ஆச்சரியமடைந்தனர் என்பதில் ஐயமில்லை."

கதர், கைத்தறிக்கு உதவி

சென்னைக்கு ரூ. ஒன்றேகால் கோடி கிடைக்கும்

புதுடில்லி, நவ 21—

கதர், கைத்தறித் தொழில் உதவிக்காக சென்னை சர்க்கார், மத்திய சர்க்காரிடமிருந்து 1953—54 க்கு, ரூ 1 24 98 310 பெறும் என்று தெரிகிறது. எல்லா மாநிலங்களுக்கும் அளிப்பதை விட இது மிக அதிகமாகும்.

கதர் கைத்தறித் தொழில் உதவிக்காக நாடு முழுவதற்கும் ஆண்டொன்றுக்கு ரூ 2 கோடி முதல் ரூ 4 கோடி வரை தரப்படும் ஒதுக்கப்பட்டுள்ளது

பம்பாய்க்கு ரூ 28 33,560 ஒதுக்கப்பட்டுள்ளது.

இதர மாநிலங்களுக்குக் கிடைக்கும் தொகைகள்:—

உத்தரப்பிரதேசம்: ரூ 20,87,900; ஒரிஸா: 5,83,658; பீஹார்: ரூ 12,13,980; ஹைதராபாத்: ரூ 12,26,000; திருவாங்கூர்—கொச்சி: ரூ 4 75,000; மைசூர்: ரூ 3,10,000; சௌராஷ்டிரா: ரூ. 50,000; போபால்: ரூ. 13,250.

கதர், கைத்தறி அபிவிருத்திக்காக மில் அபிவிருத்தி 'லெவி', ஆகஸ்டு 12-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை ரூ. 40,19,000

சென்னை சர்க்காரின் புது உத்திரவு

சென்னை, நவ. 21—

விவசாயத்திற்காக ஒதுக்கப்படாமல் இருப்பு வைக்கப்பட்டுள்ள விதியான நிலங்களை பயிர் செய்ய பட்டா வழங்குவதில் கவனிக்க வேண்டியவைகளை சென்னை சர்க்கார் நிர்ணயித்து உத்திரவு பிறப்பித்துள்ளனர். இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த சலுகைகளே இவைகளும். இதில் விதிகள் மாற்றப்பட்டு இருந்து வருகின்றன. —கேபன்

ஈக்களைக் கொல்ல

விஞ்ஞானிகளுக்கு அழைப்பு

லண்டன், நவ. 21—

இங்கிலாந்தின் தெற்கு கடற்கரை பட்டணங்களில் இதுவரை இல்லாத ஈக்களின் உபத்திரவம் ஏற்பட்டிருப்பதால் இந்த இலாகாக்களில் வேலை செய்யும் விஞ்ஞானிகளுக்கும், நிபுணர்களுக்கும் இவைகளை ஒழித்துக்கட்ட அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

யார் வகுப்புத் துவேஷி?

ஆசிரியர்: 'நம் நாடு,'
சென்னை.

ஐயா,

நான் திருச்சி டவுன் ஸ்டேஷன் வீதியிலுள்ள "உருமு தனலெட்சுமி வித்யாலயம் உயர்நிலைப் பள்ளி"யில் ஐந்தாம் படிவம் படிக்கிறேன்.

நான் இதுவரை மூன்று தடவை திருச்சியிலுள்ள அகில இந்திய ரேடியோ நிலையத்திற்கு சிறுவர் நிகழ்ச்சியில் ஈடுபட்டு பேசியுள்ளேன். வழக்கம்போல இவ்வாண்டும், எனது பள்ளியின் சார்பில், தீபாவளி அன்று (5—11—53) சென்றிருந்தேன் அப்பொழுது அங்கு நடந்த பிரிவினை மனப்பான்மை பற்றியும், பொதுவாக அங்கு நடக்கும் வஞ்சகத்தைப் பற்றியும் விளக்குகிறேன்.

நான் அங்கு சென்ற பொழுதெல்லாம் சிறுவர் பகுதியில் நடிக்கப்படும் நாடகங்களில் அந்தந்த துவேஷத்தைத் தான் பயமுறுத்தும் படியாக இருப்பது மட்டுமல்லாமல், 'அவர்களின்' கொள்கைகளைப் போதிக்கும்படியாகவும் அமைந்துள்ளது அப்போது, அந்த நடிகர், நடிகைகள் பேசுகின்ற பொழுது ஸ்லோகங்களையும் படிக்கச் சொல்கிறார்கள். இதில் எனக்கு அழுத்தமான நிரந்தரமாக உணர்ச்சி வருவது, தொல் வரலாறும் ஏதுமில்லாத பேசும் தமிழ் மாணவர்களுக்குப் பாகம் கொடுப்பதில்லை. பார்ப்பனத் தமிழில் பேசும் 'அவர்களை'ச் சேர்ந்தவர்களுக்கே வாய்ப்பு அளிக்கப்படுகிறது இதற்கெனவே, முன்கூட்டியே அவர்களின் சுற்றத்தார்களின் சிறுவர்களைத் தயார்படுத்தி நடிக்க வைக்கின்றனர். பெயருக்கு மட்டும் பள்ளியின் பெயர் விளம்பரப்படுத்தப்படுகிறது. அங்கு அவர்களைச் சேர்ந்தவர்களும் தனி நபராக கூட பாராது, பொதுவாக தனக்கு உள்ள தகுதி, தன்னைச் சேர்ந்தவர்களின் விளம்பரப் படுத்தும் கருவியாக ஆக்குகின்றனர்.

அங்கு பேசுகின்ற இவர்களுக்கு பெரும்பாலும் மொழியும் பயந்து திருப்புகின்றனர். என்போன்று தரமும் உள்ள மாணவர்களுக்கும், இன்னும் அதிகத் திறமையும் உள்ளவர்களுக்கும் தகுந்த பாகம் அளிக்கப்படுவதில்லை.

உதாரணமாக, "மாமா நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்"? என்று அழகாகத் தமிழை உச்சரிப்பவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை

"மாமா, நீங்கள் எப்போது வந்தேள்" என்று பார்ப்பனத் தமிழ் பேசுபவர்களுக்கே வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது என்று எண்ணுகிறேன்: மேலும், அங்கு உத்தியோகம் பார்க்கும் பெரும்பாலோரில் ஆரியரே அதிகம். என்கூட வந்த மாணவர்கள், தங்கள் திறமையைக் காட்ட முடியாமல் திரும்பிச் சென்றனர். இதனால் ஒவ்வொருவரும் தரம் திறமையற்றவர் என எண்ணிச் செல்கின்றனர்.

ஆகவே, "அகில இந்திய ரேடியோ திருச்சிராப்பள்ளி" சிறுவர் நிகழ்ச்சியில் பெரும்பாலும் பிராமணர்களுக்கு வாய்ப்பு கொடுத்து திறமையுள்ள தமிழருக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்பதை நான் அங்கு சென்றிருந்ததால் கண்டு தங்களுக்கு எழுத முடிந்தது. இதைப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி எல்லோரையும் உணரச் செய்து இதற்கு ஒரு முடிவுகட்டி 'சிறுவர் நிகழ்ச்சி'யை திருத்த வீரர்கள் என நம் முடங்கல் வரைகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
மு. பாலசுப்ரமணியம்,
மாணவன்,
கீழப் புலவர் ரோடு, திருச்சி,
11—11—53.

கழகக் கூட்டங்கள்

★

பண்ணுருட்டி

24—11—53 செவ்வாய்

பேசுவோர்:

ஏ கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
தில்லை - வில்லாளன்

★

நங்கவள்ளி

சிற்றரசு சதுக்கத்தில்
25—11—53 புதன் மாலை
6 மணிக்கு

தலைவர்:
சேலம் ஈ. ஆர். கிருஷ்
பேச்சாளர்கள்
சி. பி. சிற்றரசு
ப கண்ணன்
சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

பெரியகுளம்

25—11—53 புதன் மாலை
6 மணிக்கு

பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி, எம் எல்.ஏ
மதுரை— எஸ். முத்து
கே. எம். ம். மேத்தா

குறிப்பு:— அன்று 4½ மணிக்கு வடகரை முன்னேற்ற வாசக சாலையிலிருந்து மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

ஐவர் விடுதலை அறிகுறியாக?

30—11—1953-ந் தேதி, ராப் ராய் எஸ்டேட் (நீலகிரி) தி. மு. கழகக் கிளை தோழர்களால், தலைவர்கள் ஐவர் விடுதலையை யொட்டி, "நச்சுக் கோப்பை" நாடகம் தோழர் வி. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். (ந. கி.)

மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. க. ஆண்டுவிழா ஒத்திவைப்பு

"14—11—53-ந் தேதி நடைபெறவிருந்த, பொன்மலை மேலக்கற்கண்டார் கோட்டை, தி. மு. கழக 3-வது ஆண்டு விழா, மழையின் காரணமாக அன்று நடைபெறாமல், 28—11—53-ந் தேதி சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது என்பதை பொது மக்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்," என்று, செயலாளர் அறிவிக்கிறார்.

நெல்லிக்குப்பம் தி. மு. க. செயலாளர் அறிக்கை

நெல்லிக்குப்பம் நகர முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நகர வரி கொடுப்போர் சங்கம், நகர வாக்காளர் சங்கம் இவைகளில் தி. மு. கழகத் தோழர்கள் தனிப்பட்ட முறையிலே பணியாற்றுகிறார்களே தவிர, இது, நெல்லிக்குப்பம் தி. மு. கழகத்தை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது.

தி. மு. கழகத்திற்கும், மேற்கண்ட சங்கங்களுக்கும் எந்த விதச் சம்பந்தமும் இல்லை என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

குஷ்டரோகிகளுக்கு வரப்பிரசாதம்

லட்சுமணபுரி, நவ. 21—

குஷ்டரோகிகளுடைய கைகள் பாதிக்கப்படாமல் இருக்கவும், பாதிக்கப்பட்டிருந்தால் பழைய நிலையில் கைகள் மீண்டும் ஏற்படவும் வழி என்ன என்பதை வேலூர் கிருஸ்தவ கலாசாலை ரண சிகிச்சை போதகாசிரியர் கண்டு பிடித்திருக்கிறார். —கேபன்

பட்சத்திற்குப் பட்சம் குணபேதம்!

★

"டால்மியாபுர ரயில்வே ஸ்டேஷனில் ரயிலை நிறுத்தி, தடை செய்ததாக, கருணாநிதி மற்றும் ஐவர் மீதும் தொடரப்பட்ட வழக்கில், கருணாநிதிக்கு 5 மாத கடுங்காவல் தண்டனையும் ரூ. 35 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது"

—"தினத் தந்தி,"
சென்னை, 7—11—53

"கருணாநிதி, டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டத்தில் ஈடுபட்டு ரயிலை நிறுத்தியதற்காக ரூ. 35 அபராதம் விதிக்கப்பட்டதும், அவர் அபராதம் கட்ட மறுத்ததால், 5 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டதும் ஞாபகமிருக்கலாம்."

—"தினத் தந்தி"
சென்னை, 22—11—53

விஞ்ஞான உலகில்!

அணுகுண்டைவிட சக்தி வாய்ந்த விஷ வாயு!

நியூயார்க், நவ. 23—

அணுகுண்டைவிட சக்தி வாய்ந்த ஒரு விஷ வாயுவை இங்கு கண்டுபிடித்திருக்கின்றனர்.

நிறமில்லாத, வாசனையில்லாத ருசியும் இல்லாத இந்த வாயுவுக்கு "நரம்பு வாயு" என்று பெயரிட்டிருக்கின்றனர்—சுருக்கமாக ஜி பி.!

சென்ற யுத்தத்தில் ஒரு ஜெர்மானியர் கண்டுபிடித்த அடிப்படையைக் கொண்டு, இது தயாரிக்கப்பட்டிருக்கிறது மூன்று துளிகளிலிருந்து வெளிப்படும் வாயு, நான்கு நிமிடங்களில் ஒரு மனிதனை கொன்றுவிடும். அணுகுண்டைவிட சக்தி வாய்ந்த இந்த வாயுவை உற்பத்தி செய்வது அற்பமாம செலவும் குறைவாம். முகர்ந்து பார்த்தால், உடனே நரம்புகளை பாதித்து வேலை செய்யாமல் தடுத்து, உயிரைக் குடித்து விடுகிறது.

ருஷ்யாவிடம் இம்மாதிரியான ஒரு விஷவாயு இருப்பதாகக் கூறப்படுகிறது.

* * *

பூமியிலிருந்து சந்திரனை சுட ஏற்பாடு

நியூயார்க், நவ. 23—

ஹாலிவுட்டைச் சேர்ந்த சிறிது அரசியல் விஞ்ஞானி ஒருவர், அதன் மான இயந்திரமொன்றைக் கட்டி வருகிறார். இவர், இந்த இயந்திரத்திலிருந்து சுமார் கால அங்குல முள்ள ஒரு குண்டை சந்திரனை நோக்கிச் சுடப்போகிறாராம். குண்டு சிறியதானாலும், சந்திரனை அடையும்போது 10,000 ஆர்க் விளக்குகள் ஒரே சமயத்தில் எரிந்தால் எவ்வளவு வெளிச்சம் ஏற்படுமோ அவ்வளவு வெளிச்சத்தை அந்தக் குண்டு உண்டாக்குமாம்! இதிலிருந்து சந்திரமண்டலத்தைப் பற்றி பல தகவல்களை அறிந்துகொள்ள முடியுமாம்.

போர்னியாவுக்கு இந்திய விவசாயிகள்

திட்டம் கைவிடப்பட்டதாக அறிவிப்பு

புதுடெல்லி, நவ. 21—

பிரிட்டிஷ் வடக்கு போர்னியோவில் நிரந்தரமாகக் குடியேறுவதற்காக, 10,000 இந்திய விவசாயிகளை அனுப்புமாறு இந்திய சர்க்காருக்கு ஒரு ஆண்டிற்கு முன்பாக பிரிட்டிஷ் வடக்கு போர்னியோ சர்க்கார் விடுத்திருந்த கோரிக்கையை, அந்த சர்க்கார் இப்பொழுது வாபஸ் பெற்றுக் கொண்டிருப்பது வாஸ்தவமென்றும், அந்தத் திட்டத்திற்கு வடக்கு போர்னியோவிலுள்ள மக்களின் ஆதரவு இல்லாததாலும், திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கூடிய பெருஞ் செலவையும் சர்க்கார் ஏற்றுக் கொள்ள இயலாமலிருந்ததாலும், அந்தத் திட்டம் கைவிடப்பட்டதென்றும் மக்கள் சபையில், கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், பிரதம மந்திரி நேரு தெரிவித்தார்.

உங்களுக்குத் தெரியுமா?

புதுடில்லி, நவ 21—

இந்தியாவில், 1950-ல் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின், இதுவரை, 156 உபதேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இன்னும் பல உபதேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

இதுவரை 158 ஸ்தானங்கள் காலியாயின;—இதில், 140 ஸ்தானங்கள் பல்வேறு மாநில சட்டசபைகளில்; 18 பார்லிமெண்டில், தேர்தல் செல்லாது என்று, தேர்தல் டிரிபியூனல்கள் தீர்ப்பளித்ததால், 91 ஸ்தானங்கள் காலியாயின; மெம்பர்கள் காலமானதால் 24 ஸ்தானங்கள் காலியாயின; ராஜிநாமாக்களால் 43 ஸ்தானங்கள் காலியாயின.

பார்லிமெண்டில காலியான 18 ஸ்தானங்களில் 15 பூர்த்தி செய்யப்பட்டு விட்டது; பாக்கி மூன்றில், ஒன்றிற்கு தேர்தல் நடந்து முடிவு அறிவிக்கவில்லை; மற்ற இரண்டிற்கும் தேர்தல் நடைபெற வேண்டும்.

ராஜஸ்தானிலதான் அதிக (14) உபதேர்தல்கள் நடைபெற்றுள்ளன. சென்னையில 7; போபால், குடகில உபதேர்தலே நடைபெறவில்லை மாநிலங்களில் நடைபெற்ற உபதேர்தல்களில், பொதுத்தேர்தல்களில் பதிவான ஓட்டுகளைவிட அதிக ஓட்டுகள் பதிவாகியுள்ளன. —கேபன்.

அரிசி உணவினால் மக்கள் தொகை அதிகரிக்கிறதா?

புதுடில்லி, நவ. 20—

அரிசி சாப்பிடுபவர்களுக்குக் குழந்தைகள் அதிகமாக பிறக்கிறது என்று தான் கூறியதில் உண்மையிருக்கலாமென்று பல தேசங்களின் விஞ்ஞானிகள் தனக்கு எழுதியிருப்பதாக உணவு மந்திரி கூறியுள்ளார்.

இவ்விஷயத்தில் தீர்க்கமான ஆராய்ச்சி நடத்துவது அவசியமென்றும், விஞ்ஞானிகள் சிரத்தை காட்டியிருப்பது நல்ல அறிகுறியென்றும் அவர் மேலும் கூறினார்.

இந்தியாவைப் பொருத்தமட்டில அரிசி சாப்பிடும் பிராந்தியங்களில்தான் மக்கட் தொகை வளர்ச்சி அதிகமாக இருக்கிறதென்றார்.

மக்கள் அதிகமாகக் கோதுமை உட்கொண்டால், ஒருவேளை மக்கள் தொகை வளர்ச்சி குறையலாமென்றார்; ஆனால், வாழ்க்கைத்தரம் உயர்ந்தால இப்பிரச்சினை தீரலாமென்றும், அதற்காகவே, இந்திய சர்க்கார் முயன்று வருகிறதென்றும் சொன்னார்.

அரிசி சாப்பிடுபவர்களுக்குப் புரட்சி மனப்பான்மை உண்டாகிறதென்று தம்மால் நிச்சயமாகக் கூற முடியாதென்றும், பார்லிமெண்டிலுள்ள எல்லாக் கம்யூனிஸ்டுகளும் அரிசி சாப்பிடும் பிராந்தியங்களிலிருந்தே வந்திருப்பதாகவும் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குள்ள நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. ஏ. அண்ணாதுரை, எம். ஏ.